# ஏ ஐ ஏ (AIA) பிறர் வாழ்வை தொடுகிறது என்னும் தர்ம நாள் நிகழ்வு




முதல் முறையாக ஏஐஏ மலேசியா நிறுவனம் 14 அரசு சாரா இயக்கங்களுடன் (NGO) ஒன்றிணைந்து பல்வேறு சமூக நலச் சேவைகளுக்கான வசூல் வேட்டையின் அடிப்படையில் ஏஐஏ பிறர் வாழ்வை தொடுகிறது என்னும் கருப்பொருளில் தரும நோக்குடனான இந்நிகழ்ச்சி செப்டம்பர் 6, 2019 அன்று இனிதே நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் நோக்கம் இந்நிறுவனத்தின் பணியாளர்களின் நேரத்தையும் அர்ப்பணிப்பையும் நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதே ஆகும்.

மலேசியா சந்தை என்னும் இந்நிகழ்விற்கு 14 தற்காலிகப் பந்தல் அமைக்கப்பட்டு 14 வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 500க்கு மேற்பட்ட தன் பணியாளர்கள் அரசுசாரா பங்காளிகளுடன் சேர்ந்து சுவைமிக்க தின்பண்டங்களும் தாகம் தீர்க்கும் பானங்களும் அலங்கார கைவினைப் பொருட்களும் விற்கப்பட்டன. அந்த 14 தற்காலிகப்பந்தல் மலேசியாவின் 14 மாநிலங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேலும் இங்கு நடைபெற்ற நிகழ்வில் அதிர்ஷ்டக்குலுக்கல், சிறந்த அலங்காரப்பந்தல்களுக்கான போட்டி, ரத்ததான முகாம், இவற்றுடன் தனித் திறமை வாய்ந்த கெலிப் பஸ்கர்சின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. விற்பனைகள் வாயிலாக ரிம 163,000 நிகழ்விற்கு முந்திய நடவடிக்கையாலும் மொத்தம் ரிம 234,000 வசூலிக்கப்பட்டு பல்வேறு சமூக நற்பணிக்காக 14 அரசுசாரா அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.